செ.வெ.எண்:4 நாள்:5.11.2022

## *.திருப்பூர் மாநகராட்சி பொது மக்கள் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ் குமார் அவர்களின் அன்பான வேண்டுகோள்.*

---

திருப்பூர் மாநகராட்சி மண்டலம்:2, வார்டு-8, மும்மூர்த்தி நகர், கருப்பராயன் நகர் பகுதிகளில் இன்று (5.11.2022) நடைபெற்று வரும் 4 -வது குடிநீர் திட்ட குழாய் பதிக்கும் பணிகள் மற்றும் பல்வேறு தூய்மைப் பணிகளை மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ் குமார் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

***<u>மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ் குமார் அவர்கள் தெரிவித்ததாவது:</u>***

தற்போது வடகிழக்கு பருவமழை காலம் தொடங்கிவிட்டதால் தண்ணீர் மற்றும் கொசுக்களால் நோய்கள் பரவும் வாய்ப்பு அதிகம் உள்ளது. பொது மக்கள் அனைவரும் குடிநீரினை காய்ச்சி வடிகட்டி குடிக்கவும், வீட்டில் தங்களால் சேமித்து வைக்கப்டும் தண்ணீர் பாத்திரங்கள் அனைத்தும் வாரம் ஒரு முறை சோப்பு அல்லது பிளீச்சிங் பவுடர் போன்ற கிருமிநாசினி மூலம் சுத்தப்படுத்தியும். தண்ணீர் சேமிக்கும் பாத்திரங்களை காற்று புகாவண்ணம் மூடி போட்டு இறுக்கமாக மூடி வைக்க வேண்டும்.

பொது மக்கள் அனைவரும் தங்களது வீட்டின் சுற்றுபுறத்தில் இருக்கும் தேவையற்ற பொருட்கள் இருந்தால் உடனடியாக அப்புறபடுத்தி மாநகராட்சி சார்பாக வைத்திருக்கும் குப்பை தொட்டிகளில் போடவேண்டும், வணிக வளாகங்கள் மற்றும்

அனைத்து பிற நிறுவனங்கள் தங்கள் வளாகத்தில் மழைநீர் தேக்கத்தினால் கொசு உற்பத்தியாவதை தடுப்பதற்கு உரிய

நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். தேவையற்ற பொருட்களில் மழைநீர் தேங்காவண்ணமாக சுகாதாரமான முறையில் தங்கள் வளாகத்தை பராமரித்துக் கொள்ள வேண்டும்.

இது குறித்து மாநகராட்சி பணியாளர்கள், கொசு, புழு ஒழிப்பு பணியாளர்கள் டெங்குதடுப்பு நடவடிக்கை மேற்க்கொள்ள வரும் போது உரிய ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மேலும், நோய் பரப்பும் வகையில் சுகாதாரமற்ற முறையில் நோய் பரப்பக் கூடிய கொசு, புழு

உற்பத்தி ஆகும் இடங்கள் கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட வீடுகள் அல்லது நிறுவனங்களுக்கு மாநகராட்சியின் மூலம் தமிழ்நாடு பொது சுகாதாரப்பிரிவு சட்டப்பிரிவுகளின்படி அறிவிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும், தவறும் பட்சத்தில் உரிய அபராதங்கள் விதிக்கப்படும்.

திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் வசிக்கும் பொது மக்களுக்கு காய்ச்சல் அறிகுறி தென்பட்டால் உடனடியாக அருகில் உள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைக்கு சென்று உரிய சிகிச்சை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்படுகிறது.

திருப்பூர் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு மக்கள் அனைவரும் தங்களது முழு

ஒத்துழைப்பையும், தடுப்பு நடவடிக்கைகளை பின்பற்றுமாறு மாண்புமிகு மேயர் திரு.ந.தினேஷ் குமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இவ்வாய்வில், மண்டல தலைவர் திரு.ர.கோவிந்தராஜ், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பூர் மாநகராட்சி.**

